**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 34/2021**

**ம.சா.1 – அழகம்மாள் 08.01.2025**

**கு.வி**

நான் கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டு வேலை தான் பார்த்து வருகிறேன். நானும் எனது வாய்பேச முடியாத மகனும் தனியாக வசித்து வருகிறோம். எனக்கு 3 மகன்கள். விபத்து நடந்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை 4 வருடங்களுக்கு முன் விபத்து ஏற்பட்டது. விபத்து கல்குறிச்சி ஆலங்குளத்தில் ஏற்பட்டது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை பிறர் சொல்லி தான் தெரியும். எனது கணவர் காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டார். நான் தற்பொழுது எனது கணவரின் ஓய்வூதியமாக ரூ.12000/– பெற்று வருகிறேன். எனது கணவர் ஓய்வு பெற்ற பின்பு பெட்டிக்கடை வைத்து நடத்தி வந்தார். அந்த பெட்டி கடையில் ஒரு நாளுக்கு ரூ.500/– வருமானம் வரும். எனது கணவர் பெட்டி கடை வைத்து நடத்தியதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பெட்டிக்கடை வைத்து நடத்தவில்லை என்றும் அவரது ஓய்வூதியத்தில் தான் குடும்பம் நடத்தி வந்தார் என்றும் நான் வழக்கிற்காக பெட்டி கடை வைத்து நடத்தியதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை நான் இந்த வழக்கில் சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்காத தோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நஷ்டஈடு அதிகம் பெறவேண்டும் என்பதற்காக மருத்துவ செலவை மிகைப்படுத்தி

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கும் 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே காப்பீடு ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவருக்கு வயது அதிகம் என்பதால் நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை